# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## ஓமியோபதி

**ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை ஒன்றினைத் தாபிப்பதற்கும்; ஓமியோபதிசார் தொழிலர்களையும், ஓமியோபதிசார் மருந்தாளர்களையும் பதிவு செய்வதற்கும் நிறைவேற்றுப் பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கும்; ஓமியோபதிசார் நிறுவனங் களைப் பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும்; ஓமியோபதிசார் மருத்துவ முறைமையை மேம்படுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் ஓமியோபதி மருந்துகளினதும், ஔடதங்களினதும், வேறு ஓமியோபதிசார் தயாரிப்புக்களினதும் உற்பத்தி, இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், விற்பனை, விநியோகம் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்; 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தினை நீக்கம் செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் அவர்களால் 2016, யூன் மாதம் 07 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, ஏப்பிறல் மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***109 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 31.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

ச.வ.ஓ 46/2005

**ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை ஒன்றினைத் தாபிப்பதற்கும்; ஓமியோபதிசார் தொழிலர்களையும், ஓமியோபதிசார் மருந்தாளர்களையும் பதிவு செய்வதற்கும் நிறைவேற்றுப் பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கும்; ஓமியோபதிசார் நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும்; ஓமியோபதிசார் மருத்துவ முறைமையை மேம்படுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் ஓமியோபதி மருந்துகளினதும், ஔடதங்களினதும், வேறு ஓமியோபதிசார் தயாரிப்புக்களினதும் உற்பத்தி, இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், விற்பனை, விநியோகம் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்; 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தினை நீக்கம் செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### ஓமியோபதிசார் மருத்துவப் பேரவையினைத் தாபித்தல்

*ஓமியோபதிசார் மருத்துவப் பேரவையினைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை என அழைக்கப்பட வேண்டிய பேரவை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

2-PL 009827 - 400 (2016/03)

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையைக் கொண்டிருத்தலும் பொது இலச்சினையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை வைத்திருக்கவும், கொள்ளவும் மற்றும் கையுதிர்க்கவும் செய்யலாம்.

(3) பேரவையானது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது —

(i) இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர்;

(ii) அமைச்சின் மேலதிகச் செயலாளர் அல்லது அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான சிரேட்ட உதவிச்செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாதவோர் அலுவலர்;

(iii) திறைசேரியின் பிரதிநிதியொருவர், இவர் நிதியென்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுவார்;

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர்;

(ஆ) பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்களிடையேயிருந்து 6 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையில் தெரிவு செய்யப்பட வேண்டியவர்களான நான்கு உறுப்பினர்கள்;

(இ) குறைந்தது இரண்டு உறுப்பினர்களாவது பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்டவர்களாக இருக்குமாறு அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களான மூன்று உறுப்பினர்கள்.

பேரவையின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு அல்லது நியமிக்கப் படுவதற்கான தகைமையீனம்.

**3**. ஆளொருவர் -

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஏதேனும் மாகாண சபையின் உறுப்பினராக அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது அவ்வாறு வந்தால்; அல்லது

(ஆ) அவர் இருபத்தைந்து வயதிற்கு மேற்படாதவராக இருப்பின்; அல்லது

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின்; அல்லது

(ஈ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின கீழ் வங்குறோத்தானவராக அல்லது கடனிறுக்க வகையற்றவராக வெளிப்படுத்தப்படுமிடத்தும் அத்துடன் அவர் பொறுப்பு விடுவிக்கப்படாத, வங்குறோத்தானவராக அல்லது கடனிறுக்க வகையற்றவராக இருப்பின்; அல்லது

(உ) அவர் பேரவையின் ஊழியர் ஒருவராக இருப்பின்; அல்லது

(ஊ) அவர் ஒழுக்கக்கேட்டுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றினைப் புரிந்துள்ளார் எனத் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(எ) இலங்கைப் பிரசை அல்லாதவராக அல்லது இலங்கைப் பிரசையாயிருப்பதினின்றும் இல்லாதொழிந்தால்; அல்லது

(ஏ) பதிவு செய்யப்பட்டவொரு ஓமியோபதிசார் தொழிலராக இல்லாதொழிந்தால்,

பேரவையின் உறுப்பினர் ஒருவராகத் தேர்வுசெய்யப்படுவதிலிருந்து அல்லது நியமிக்கப்படுவதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

*உறுப்பினர் களைப் பதவியிலிருந்து அகற்றுதல்.*

**4.** (1) அமைச்சரானவர் குறித்தொதுக்கப்பட்ட ஏதுக்களின் மீது பதவிவழி உறுப்பினரொருவர் அல்லாத, எவரேனும் உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு பதவி அகற்றலும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*பேரவையின் உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதல்.*

**5.** பதவிவழி உறுப்பினர் தவிர்ந்த பேரவையின் உறுப்பினர் ஒருவர்-

(அ) அவர் பேரவையின் அபிப்பிராயத்தில் போதியதான அனுமதியின்றி, பேரவையின் அடுத்து வருகின்ற மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்கத் தவறியிருப்பின்;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர் ஒருவராக இருப்பதினின்றும் இல்லாதொழிவதன் மேல்;

(இ) அவர், அமைச்சருக்கு எழுத்தில் தனது பதவிவிலகலை அனுப்பியிருப்பதன் மேல்;

(ஈ) அவரது பதவிக்காலம் காலாவதியாவதன் மேல்;

(உ) இச்சட்டத்தின் கீழ் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல்;

(ஊ) 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் தகைமையீனங்களுக்கு ஆளானவராக வருமிடத்து,

அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

*பிரிவு 2 (3) (ஆ) என்பதன் நோக்கத்திற்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.*

**6**. பிரிவு 2 (3) (ஆ) என்பதன் நோக்கத்திற்காக தேர்தலொன்று அமைச்சரின் அமைச்சின் செயலாளரினால் விதித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

*தலைவரையும் துணைத் தலைவரையும் நியமித்தல்.*

**7**. (1) பேரவையின் உறுப்பினர்கள் அவர்களிடையேயிருந்து விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையில் பதிவு செய்யப்பட்டவோர் ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலராக விருக்கின்றவரான ஒரு தலைவரையும் மற்றும் ஒரு துணைத் தலைவரையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) பேரவைக்கு உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பில் ஏதேனும் பிணக்கு எழுகின்றவிடத்து, அது அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடயத்தல் அமைச்சரின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

*தலைவர் முதலியோரின் பதவி துறத்தல்.*

**8**. தலைவர், துணைத் தலைவர் மற்றும் பேரவையின் பதவிவழி உறுப்பினர்கள் தவிர்ந்த எவரேனும் உறுப்பினர் எந்நேரத்திலும் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறக்கலாம் என்பதுடன், அத்தகைய பதவி துறத்தலானது. அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வலுவுக்கு வருதலும் வேண்டும்.

*பேரவையின் உறுப்பினர்களின் பதவிக் காலம்.*

**9**. (1) பேரவையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு பேரவையின் உறுப் பினராக இருக்கின்றாரோ அந்தப் பதவியை அவர் வகிக்கின்ற வரை பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைவர், துணைத் தலைவர் மற்றும் பேரவையின் உறுப்பினர் ஒருவர், முன்னதாகவே அவர் தமது பதவியை இறப்பினால், பதவி விலகலினால், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் வறிதாக்கினாலன்றி, மூன்று வருட காலப்பகுதி ஒன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், இறப்பினால், பதவி விலகலினால், பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினர் ஒருவரின் இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்த உறுப்பினரை அவர் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய உறுப்பினரால் அவ்வாறு வகிக்கப்பட்ட பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதி, 2 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய உறுப்பினரை மீளத் தேர்ந்தெடுத்தல் அல்லது மீளப் பெயர்குறித்து நியமித்தல் என்னும் நோக்கத்திற்கு முழுக் காலப்பகுதி ஒன்றாகக் கருதப்படுதலாகாது.

(3) பேரவையின் உறுப்பினர் ஒருவர் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி தொடர்ச்சியான இரண்டு காலப்பகுதிகளுக்கு மீளத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது மீளப் பெயர்குறித்து நியமிப்பதற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(4) பேரவையின் உறுப்பினர்களின் தேர்தல் அல்லது நியமனமானது பேரவையின் பதவிக்காலம் காலாவதியாவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் நடாத்தப்படுதல் வேண்டும்.

பேரவையின் கூட்டங்கள்.

**10.** (1) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைவரே தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், தலைவர் வருகை தராதிருக்கின்றவிடத்து, துணைத்தலைவர் அல்லது தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரும் வருகை தராதிருக்கின்றவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்களிடையேயிருந்து அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், எழு ஆதல் வேண்டும்.

(4) ஏதேனும் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய விடயங்கள் எல்லாம் கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மைகொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில், வாக்குகள் சமமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் தலைவர், துணைத்தலைவர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற உறுப்பினர் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராயிருத்தல் வேண்டும்.

(6) பேரவையானது இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைவாக அதனது கூட்டங்களையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவது தொடர்பான நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

*நடபடிகளின் நிகழ்ச்சிக் குறிப்பு.*

**11.** (1) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நடபடிகளின் நிகழ்ச்சிக் குறிப்பானது இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென வைத்திருக்கப்பட்ட புத்தகத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், கூட்டத்தின் தலைவரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நிகழ்ச்சிக் குறிப்புக்களின் பிரதியொன்று, கூட்டம் நடைபெற்ற திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களினுள் அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**12.** பேரவையின் உறுப்பினரொருவருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் மற்றும் அத்தகைய முறையிலும் ஊதியமளிக்கப் படுதல் வேண்டும்.

*பேரவை உறுப்பினர் களின் ஊதியம்.*

**13.** பேரவையின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணத்தினால் மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில், அல்லது பேரவையை அமைந்துருவாக்குவதில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப் படுதலாகாது.

*பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணத் தினால் மட்டும் செல்லுபடியற்ற தாதலாகாது.*

**14.** பேரவையின் இலட்சினையானது –

*பேரவையின் இலட்சினை.*

(அ) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பேரவைப் பதிவாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் திருத்தப்படலாம்;

(இ) பேரவைப் பதிவாளரினதும் மற்றும் பேரவையின் இரண்டு உறுப்பினர்களினதும் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக் கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் எல்லோரும் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

## பாகம் II

### பேரவையின் குறிக்கோள்களும் மற்றும் தத்துவங்களும்

**15.** பேரவையின் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

*பேரவையின் குறிக்கோள்கள்.*

(அ) ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலை மேம்படுத்துதலும், ஆதரித்தலும் மற்றும் ஒழுங்குபடுத்துதலும்;

(ஆ) ஓமியோபதிசார் மருத்துவத்திற்கிணங்க, பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன் ஓமியோபதிசார் மருத்துவத் தொழில் முறைமையை மேம்படுத்தலும்;

(இ) ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலில் கற்கையையும், ஆராய்ச்சியையும் ஊக்குவித்தலும் ஊக்கப்படுத்துதலும்;

(ஈ) ஓமியோபதிசார் நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும்;

(உ) அரசாங்க ஓமியோபதிசார் போதனா வைத்தியசாலை தவிர்ந்த, ஓமியோபதிசார் மருத்துவத் தொழில் முறைமைக்கிணங்க சிகிச்சையை வழங்குகின்ற ஓமியோபதிசார் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்; அத்துடன்

(ஊ) ஓமியோபதிசார் மருந்துகள், ஔடதங்கள் மற்றும் வேறு ஓமியோபதிசார் தயாரிப்புக்கள் என்பவற்றின் உற்பத்தியினை, இறக்குமதியினை, களஞ்சியப்படுத்தலை, விற்பனையினை மற்றும் விநியோகத்தினை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்.

**16**. பேரவையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:- பேரவையின் தத்துவங்கள்.

(அ) ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களை, ஓமியோபதிசார் மருந்தாளர்களை, ஓமியோபதிசார் தாதிகளை மற்றும் ஓமியோபதிசார் நிறுவனங்களை பதிவு செய்தல்;

(ஆ) ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களைப் பதிவு செய்யும் மற்றும் அத்தகைய அங்கீகாரம் எந்தச்

சூழ்நிலைகளில் வழங்கப்படலாமோ அல்லது மறுக்கப் படலாமோ அந்தச் சூழ்நிலைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கென இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் ஓமியோபதிசார் மருத்துவ நிறுவனங்களி னால் வழங்கப்பட்ட ஓமியோபதி தொடர்பான மருத்துவத் தகைமைகளை அங்கீகரித்தல்;

(இ) ஏதேனும் பல்கலைக்கழகத்தினால் அல்லது மருத்துவ நிறுவனத்தினால் ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை வழங்குவதற்கான கற்கைநெறிகள், பரீட்சைகள் தொடர்பில் அத்தகைய பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ நிறுவனத்திடமிருந்து அத்தகைய தகவல்களைக் கோருதல்;

(ஈ) அத்தகைய நிறுவனங்களினால் தேவைப்படுத்தப்பட்ட நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற் காக ஓமியோபதிசார் நிறுவனங்கள் மீது மேற்பார்வை யையும் கட்டுப்பாட்டையும் பிரயோகிப்பதற்கென மருத்துவப் பரிசோதகர்களை நியமித்தல்;

(உ) ஓமியோபதிக்கிணங்க, நோய்களின் சிகிச்சைக்கு அவசி யமான சேவைகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(ஊ) ஓமியோபதிசார் நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும் மற்றும் ஓமியோபதியில் பட்டப்பின்படிப்பு கல்விக்கு ஏற்பாடு செய்தலும்;

(எ) வைத்தியசாலைகள், மருந்தகங்கள், நிலையங்கள், மருந்து விற்பனை நிலையங்கள் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களை அல்லது தாபனங்களை தாபித்தல் மற்றும் பேணுதல் மற்றும் ஓமியோபதிசார் சிகிச்சை யினை அளிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் அவசியமான ஓமியோபதிசார் மருந்துகளை இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல்;

(ஏ) ஓமியோபதிசார் மருந்துகளின் அறிவியல் ரீதியிலான உற்பத்தியை ஊக்கப்படுத்துதல்;

(ஐ) ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரிகளினாலும் வேறு ஓமியோபதி நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட கற்கை நெறிகள், பரீட்சைகள், பணியாட்டொகுதி, சாதனங்கள், இடவசதி, பயிற்சி, மருத்துவமனைகள் மற்றும் வேறு வசதிகள் தொடர்பாக மருத்துவக் கல்வியின் ஆகக்குறைந்த நியமனங்களை விதித்துரைத்தலும் பேணுதலும்;

(ஒ) தேவையுடைய ஆட்களிற்கு குறிப்பாக இளைஞர்களுக்கு புலமைப்பரிசில் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதன் மூலமும், அத்துடன் கற்கைநெறிகளை வழங்குகின்ற அல்லது ஓமியோபதி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலமும் ஓமியோபதிசார் மருத்துவ முறைமையின் கற்கை மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவித்தல்;

(ஓ) பட்டப்பின்படிப்பு ஓமியோபதிசார் மருத்துவக்கல்வி தொடர்பாக மருத்துவக் கல்வியின் ஆகக்குறைந்த நியமங்களை விதித்துரைத்தலும் பேணுதலும்;

(ஔ) ஓமியோபதி முறைகளுக்கிணங்க நோய்களை நுண்ணாய்வு செய்தல், நோய்களுக்கு சிகிச்சை அளித்தல், நோய்த்தடுப்பை மேற்கொள்ளுதல் மற்றும் பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றுதல் ஆகியவற்றுக்கு அவசியமானவாறான அத்தகைய வழிமுறைகளை அபிவிருத்தி செய்தலும் ஊக்குவித்தலும்;

(க) ஓமியோபதி தொடர்பான பட்டங்களையும் வேறு கல்விசார் திறமைகளையும் வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு உயர்கல்வி நிறுவனங்களுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல்;

(ங) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் நியதிகளின்படி ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியைத் தாபிப்பதற்கு அமைச்சரின் அங்கீகாரத்துடனும் மற்றும் உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல்;

(ச) பேரவையின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவறான அத்தகைய சபைகளை அல்லது குழுக்களை அமைச்சரின் அங்கீகாரத்துடன் தாபித்தல்;

(ஞ) பேரவையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் என விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ட) பேரவையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவாக அல்லது உசிதமாக இருக்கக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

**17.** (1) பேரவையானது, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் நோக்கத்திற்காக விதிகளை ஆக்கலாம்:- விதிகளை ஆக்குவதற்குப் பேரவைக்குள்ள தத்துவம்.

(i) பேரவையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அதன் பணியாட்டொகுதியின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் பேணுவதற்கும்;

(ii) அத்தகைய பணியாட்டொகுதியின் வேதனங்கள், சம்பளங்கள் அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிப்பதற்கும்;

(iii) அத்தகைய பணியாட்டொகுதியின் சேவைக்கான நியதி நிபந்தனைகளைத் தீர்மானிப்பதற்கும்;

(iv) அத்தகைய பணியாட்டொகுதியின் நன்மைக்காக சகாய நிதியங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தற்கும் அத்துடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவு தொகைகளை அளிப்பதற்கும்; அத்துடன்

(v) பேரவையின் ஆதனத்தை முகாமைசெய்து பேணுவதற்கும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பிலும் பேரவையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பேரவையின் பதிவாளர் மற்றும் வேறு அலுவலர்கள்.

**18.** (1) பேரவையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் -

(அ) பேரவையின் செயலாளராகச் செயலாற்ற வேண்டியவரான பதிவாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கு நியமித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது சேவைக்கமர்த்தப்பட்ட ஆட்கள் எல்லோரும் தண்டனைச் சட்டக்கோவையின் 19ஆம் பிரிவின் கருத்துக்குட்படப் பகிரங்க அலுவலர்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஓமியோபதி

## பாகம் III

### நிறைவேற்றுப் பணிப்பாளர்

*நிறைவேற்றுப் பணிப்பாளரின் நியமனம்.*

**19.** (1) அமைச்சரானவர் அமைச்சினைச் சேர்ந்த சிரேட்ட பகிரங்க அலுவலரொருவரை நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும். (இவர், இதனகத்துப்பின்னர் "பணிப் பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) அவர் பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) (அ) பேரவையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாயிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பிரதிப் பணிப்பாளர்களும் வேறு அலுவலர்களும் நியமிக்கப்படலாம்;

(ஆ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதிப் பணிப்பாளர் களும் வேறு அலுவலர்களும் பகிரங்க அலுவலர்க ளாகவிருத்தல் வேண்டும்;

(இ) பணிப்பாளர் இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங் களையும் கடமைகளையும் புரிகையிலும் மற்றும் பிரயோகிக்கையிலும் அமைச்சரினால் வழங்கப் பட்ட பொதுவான அல்லது விசேடமான பணிப்புக் களுக்கு அமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், பேரவைக்குப் பொறுப்புள்ளவராக இருத்தலும் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் அவரது தத்துவங்கள் அல்லது கடமைகளுள் எவற்றையும் பிரதிப்பணிப்பாள ரெவருக்கும் கையளிக்கலாம்.

*பணிப்பாளரின் பணிகள்.*

**20.** (1) பணிப்பாளர் பேரவையின் பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக பின்வரும் பணிகளை நிறைவேற்ற லாம்:-

(அ) பணியாட்டொகுதியினருடைய கட்டுப்பாடும் நிர்வாகமும் உட்பட இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நிர்வாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் முடிபுகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பானவராதல் வேண்டும்; அத்துடன்

(இ) பேரவையினால் பணிப்பாளருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல்.

**21.** பேரவையானது அமைச்சரின் முன் அங்கீகாரத்துடனும் மற்றும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடனும், பின்வரும் கருமங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தினால் அந்நோக்கத்திற்கென வாக்களிக்கப்பட்ட பணத்திலிருந்து பின்வரும் நோக்கங்களுக்காக அத்தகைய தொகையை வழங்கலாம் - எந்த விடயம் தொடர்பில் பணம் செலுத்தப் படலாம் என்பது.

(அ) நிர்வாகத்துடன் தொடர்புபட்ட செலவுகளைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக ஓமியோபதிசார் மருத்துவப் பேரவைக்கு;

(ஆ) ஓமியோபதி தொழிலர்களின் பயிற்சிக்காக தாபிக்கப்படும் அத்துடன் பேணப்படும் ஏதேனும் நிறுவனத்திற்கு;

(இ) ஓமியோபதி கற்கை நெறிகளை வழங்குகின்றதான அல்லது ஓமியோபதி பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதான ஏதேனும் நிறுவனத்திற்கு;

(ஈ) ஓமியோபதி முறைமைகளின் மேம்பாட்டிற்காகத் தாபிக்கப்பட்ட அத்துடன் பேணப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு; அத்துடன்

(உ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எவரேனும் திறமையுள்ளவர்களான அல்லது தேவையுள்ள மாணவர்களுக்கு ஓமியோபதி கற்கைகளை நிறைவேற்றுவதற்கு புலமைப்பரிசில்களை அல்லது பணத்தொகைகளை வழங்குவதற்கு.

## பாகம் IV

### ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரிகளை அல்லது ஓமியோபதிசார் மருத்துவ நிறுவனங்களைத் தாபித்தல்

*பேரவை தவிர்ந்த வேறு ஆட்களினால் ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனங்கள் தாபிக்கப் படுதல்.*

**22.** (1) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் மற்றும் பேரவையினதும் முன்னரான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலன்றி ஆளெவரும் ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது ஓமியோபதிசார் நிறுவனம் ஒன்றினைத் தாபித்தல் ஆகாது.

(2) அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது ஓமியோபதிசார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் மற்றும் பேரவையினதும் முன்னரான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலன்றி—

(i) ஏதேனும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி அல்லது ஓமியோபதிசார் பயிற்சி உள்ளடங்கலாக, ஏதேனும் பட்டத்தை, திப்புளோமாவை அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு இட்டுச்செல்லுகின்ற ஓமியோபதிசார் துறையுடன் தொடர்புபட்ட ஒரு புதிய அல்லது உயர் கற்கைநெறி அல்லது பயிற்சியை ஆரம்பித்தல் ஆகாது; அல்லது

(ii) பட்டப்பின் படிப்புக் கற்கைநெறி அல்லது பயிற்சி உள்ளடங்கலாக, ஏதேனும் பட்டத்தை, திப்புளோமாவை அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமையை அளிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு இட்டுச்செல்கின்ற ஓமியோபதிசார் துறையுடன் தொடர்புபட்ட ஏதேனும் கற்கைநெறியில் அல்லது பயிற்சியில் அதனுடைய அனுமதித் திறனை அதிகரித்தல் ஆகாது.

(3) உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பட்டப்பின் படிப்புக் கற்கை நெறி அல்லது பயிற்சி உள்ளடங்கலாக ஒவ்வொரு கற்கை நெறியும் மற்றும் பயிற்சியும் 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறைந்தபட்சக் கல்வி நியமங்களுக்கு இணங்கியொழுகியதாகவிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப் பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டு மென்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐம்பதாயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கும் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) உட்பிரிவு (4) இன் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாகப் பேரவை யானது, (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட செயல்களின் புரிதல்களை அல்லது அவை தொடர்ந்து புரியப்படுதலைத் தடை செய்வதற்கென மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் XLVIII என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(6) இப்பிரிவின் கீழ் தவறொன்றினைப் புரிகின்ற ஆள், ஆட்கள் குழுவொன்றாக இருக்குமிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அவ்வாட்கள் குழுவின் பணிப்பாளர் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமம் ஒன்றாக இருப்பின், அக்குழு மத்தின் பங்காளர் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும்,

அத்தவறிற்கு குற்றவாளியாக இருந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயினும், அத்தகைய குழுவின் அப்பணிப்பாளர், அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் அல்லது அலுவலர் அவரது அறிவுக்கெட்டாமல் அத்தவறானது புரியப்பட்டுள்ள தென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமாக இருக்கின்றதான அத்தகைய எல்லா விழிப்புணர்வுக் கவனத்தையும் அவர் எடுத்துள்ளார் என எண்பிப்பாராயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அத்தகைய தவறிற்குக் குற்றவாளியாக இருந்தவராகக் கருதப்படுதலாகாது.

## பாகம் V

## ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை அங்கீகரித்தல்

*இலங்கையில் அளிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை ஏற்றங்கீகரித்தல்.*

**23.** (1) இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியினால் அல்லது வேறு ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப் பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகள், உட்பிரிவு (2) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் படலாம்.

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட மருத்துவக் கல்லூரி அல்லது ஓமியோபதிசார் நிறுவனம் தொடர்பாக —

(அ) ஏதேனும் அத்தகைய தகைமையின் அளிப்பிற்கு அல்லது வழங்குதலுக்கு இட்டுச்செல்கின்ற ஏற்றங்கீ கரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி யொன்று அல்லது ஓமியோபதிசார் நிறுவனமொன்று அளிக்கின்ற கற்கை நெறிகள்;

(ஆ) அத்தகைய ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை அளிக்கின்ற அல்லது வழங்குகின்ற நோக்கத்திற்காக

அத்தகைய கல்லூரியினால் அல்லது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஏதேனும் பரீட்சையில் தேவைப்படுத்தப் பட்ட திறனின் மட்டமானது; அல்லது

(இ) அத்தகைய கற்கை நெறிக்காக அத்தகைய கல்லூரியால் அல்லது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பணியாட்டொகுதி, கருவி, இருப்பிடவசதி மற்றும் வசதிகள்,

27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுடன் இசைந்தொழுகுகின்றதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய பரிசோதனைகளை, நுண்ணாய்வுகளை மற்றும் விசாரணைகளைச் செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான அத்தகைய பரிசோதனைகளை, புலனாய்வுகளை மற்றும் விசாரணைகளைச் செய்வதன் மேல் பேரவையானது திருப்திப்பட்டால், அத்தகைய ஓமியோபதி சார் மருத்துவத் தகைமைகளை விதித்துரைக்கப்பட்ட முறையில் அங்கீகரிக்குமாறு அமைச்சருக்கு விதப்புரை செய்யலாம்.

(4) பேரவையானது அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய தகைமைகள் பற்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் பொதுமக்களுக்கு அதிற் குறித்துரைக்கப்பட்ட திகதியில் வலுவுக்கு வருமாறு அறிவிக்கலாம்.

இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட ஓமியோபதிசார் தகைமைகளை ஏற்றங்கீகரித்தல்.

**24.** (1) இலங்கைக்கு வெளியேயுள்ள ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியினால் அல்லது மருத்துவ நிறுவனம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் மருத்துவத் தகைமையானது பேரவையினால் அத்தகைய கல்லூரி அல்லது நிறுவனத்தினுடைய மருத்துவக் கல்வியின் தராதரத்தைக் கருத்திற்கொண்டும் மற்றும் அந்த நாட்டின் தோதான சட்டங்களின் கீழ் அத்தகைய தகைமையை ஏற்றங்கீகரிப்பதற்குப் பொறுப்பான அதிகாரசபையினால் அத்தகைய தகைமையானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமையாகவிருக்கின்றமையையும் கருத்திற்கொண்டும் அங்கீகரிக்கப்படலாம்.

(2) (அ) பேரவையானது ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளின் நாடுகளுக்கிடையிலான பரஸ்பர ஏற்றங்கீகரிப்புக்கான திட்டமொன்றை உருவாக்குவதற்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரசபையுடன் இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் நாட்டில் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்.

(ஆ) ஏதேனும் அத்தகைய திட்டத்தின் பயனாகப் பேரவையானது வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அதில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுமாறு பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகைமையொன்றாக அத்தகைய தகைமையை உள்ளடக்குவதற்கு அது எண்ணுகின்றதெனப் பொதுமக்களுக்கு அறிவிக்கலாம்.

(இ) பேரவையானது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அதிகாரசபையால் அளிக்கப்பட்ட ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவத் தகைமையின் ஏற்றங்கீகரிப்பை மறுத்துள்ளவிடத்து, பேரவையின் தீர்மானத்தால் அதிருப்தியுறுகின்ற அத்தகைய கல்லூரி அல்லது அத்தகைய நிறுவனம் தீர்மானம் அதற்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இருவாரங்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அமைச்சர் அத்தகைய மேன்முறையீட்டைக் கருத்திற்கெடுத்ததன் பின்னரும் அத்துடன் அத்தகைய மறுப்புக்கான காரணம், ஏதேனும் இருப்பின், அதற்கான காரணத்தைக் குறிப்பிடுகின்ற அறிக்கையொன்றைப் பேரவையிடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னரும் அத்தகைய தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(3) மருத்துவக் கல்வியின் தரத்தினைத் தீர்மானிக்கையில் (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காகப் பேரவையானது 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சக் கல்வி நியமங்களைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**25.** (1) பேரவையானது — 

*பேரவையானது மருத்துவப் பரிசோதகர்களை நியமித்தல்.*

(அ) ஓமியோபதியில் அறிவு புகட்டப்படுகின்ற இடமான ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது

வேறு ஓமியோபதிசார் நிறுவனத்தைப் பரிசோதிப் பதற்கு; அல்லது

(ஆ) (i) அத்தகைய கல்லூரியினால் அல்லது நிறுவனத்தி னால் வழங்கப்படும் மருத்துவத் தகைமை யொன்றை அளிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு இட்டுச் செல்லும் கற்கை நெறிகள்;

(ii) அத்தகைய ஏதேனும் தகைமையை அளிப்பதற் கான அல்லது வழங்குவதற்கான நோக்கத்திற் கென அத்தகைய கல்லூரியினால் அல்லது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் தேவைப்படுத்தப்பட்ட தேர்ச்சியின் தரம்;

(iii) அத்தகைய கற்கை நெறிக்கென அத்தகைய கல்லூரியினால் அல்லது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணியாட்டொகுதி, கருவி தங்குமிடம் மற்றும் வசதிகள்,

அத்தகைய ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியினால் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை ஏற்றங்கீகரிப்பதற்காக 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட குறைந்த பட்ச நியமங்களுடன் இணங்கியொழுகுவதைப் பரிசீலனை செய்வதற்கு, நுண்ணாய்வு செய்வதற்கு மற்றும் விசாரணை செய்வதற்கு அவசியமான தெனக் கருதுகின்றவாறான ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி களில் கற்பிக்கப்படும் பாடங்களில் நிபுணத்துவர்களாக இருக் கின்றவர்களான ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையான மருத்துவப் பரிசோதகர்களை நியமித்தல் வேண்டும்.

(2) அத்தகைய மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவரான ஒவ்வோர் ஆளும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மருத்துவப் பரிசோதகர் அத்தகைய நுண்ணாய்வு, பரிசோதனை அத்துடன் விசாரணை

எல்லாவற்றையும் செய்கின்ற நோக்கத்திற்காக அத்தகைய மருத்துவப் பரிசோதகரினால் தேவைப்படுத்தப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தலும் வேண்டும்.

(3) மருத்துவப் பரிசோதகர்கள் அத்தகைய மருத்துவக் கல்லூரி யினால் அல்லது மருத்துவ நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் பயிற்சியுடன் அல்லது பரீட்சையினை நடாத்துதலுடன் தலையிடுதல் ஆகாது.

(4) எவரேனும் மருத்துவப் பரிசோதகர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஏதேனும் நுண்ணாய்வு, பரிசோதனை அல்லது விசாரணையைச் செய்கின்றவிடத்து, அவர் பேரவைக்கு அவருடைய காண்பிப்புகள் பற்றிய அறிக்கை யொன்றைச் செய்தல் வேண்டும்.

(5) பேரவையானது சம்பந்தப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது மருத்துவ நிறுவனத்திற்கு, அதனது அவதானிப்புகளை அனுப்பும்படி அத்தகைய கல்லூரியை அல்லது நிறுவனத்தைத் தேவைப்படுத்தி அத்தகைய ஏதேனும் அறிக்கையின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(6) அத்தகைய அவதானிப்புகள் பெறப்பட்டதன் மேல் பேரவையானது, விடயத்திற்கு ஏற்றவாறு, அக்கல்லூரியின் அல்லது நிறுவனத்தின் அவதானிப்புக்களுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.

*விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு ஒத்திசையத் தவறுதலின் விளைவுகள்.*

**26.** (1) பரிசோதனையாளரின் அறிக்கையொன்று கிடைக்கப் பெற்றதன் மேல் -

(அ) ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியினால், அல்லது ஓமியோபதிசார் நிறுவனத்தினால் வழங்கப் படும் ஒரு மருத்துவத் தகைமையின் அளிப்பிற்கு அல்லது வழங்குதலுக்கு இட்டுச் செல்லும் கற்கை நெறிகள்; அல்லது

(ஆ) அத்தகைய மருத்துவக் கல்லுரியால் அல்லது நிறுவனத்தால் அத்தகைய ஏதேனும் மருத்துவத் தகைமையின் அளிப்பிற்கு அல்லது வழங்குகைக்கு இட்டுச்செல்லும் நோக்கத்திற்காக நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளுக்குத் தேவைப்படுத்தப்பட்ட திறமை; அல்லது

(இ) அத்தகைய மருத்துவக் கல்லூரியினால் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிக்கான பணியாட்டொகுதி, கருவி தங்குமிடம் மற்றும் வசதிகள்,

விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு ஒத்திசையவில்லை எனப் பேரவைக்குத் தோன்றுமாயின், பேரவையானது அமைச்சருக்கு அத்தகைய தகைமையானது இச்சட்டத்தின் நோக்கங்களுக்கான ஏற்றங்கீகரிக்கப்படுதல் ஆகாது என்று விதப்புரை செய்யலாம்.

(2) அத்தகைய விதப்புரையைப் பெற்றுக்கொண்டதன் மேல் அமைச்சரானவர், அத்தகைய விதப்புரையின் பிரதியொன்றை அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியின் அல்லது ஓமியோபதிசார் நிறுவனத்தின் அதிகார சபைக்கு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய கல்லூரி அல்லது நிறுவனம் தமது கருத்துரைகளை சமர்ப்பிப்பதற்காக அனுப்பலாம்.

(3) கருத்துரைகள் எவையேனும் இருப்பின், அவற்றைப் பெற்றதன் மேல் அல்லது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கருத்துரைகளை செய்யப்படாதிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் அவர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய மேலதிக விசாரணையைச் செய்ததன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனம் தொடர்பில் அல்லது அத்தகைய மருத்துவக் கல்லூரியுடன் அல்லது நிறுவனத்துடன் இணைந்ததாகவுள்ள ஏதேனும் நிறுவனம் தொடர்பில் சொல்லப்பட்ட மருத்துவத் தகைமையானது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமையாக இருப்பதினின்றும் அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமென வெளிப்படுத்துதல் வேண்டும்.

*ஆகக் குறைந்த கல்வி நியமங்கள்.*

**27.** பேரவையானது, இலங்கையிலுள்ள ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது ஓமியோபதிசார் மருத்துவ நிறுவனம் என்பவற்றால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகைமைகளை அளிப்பதற்காக தேவைப்படுத்தப்படும் ஓமியோபதிசார் பட்டத்தின் திப்புளோமாவிற்கு அளிப்பிற்கு அல்லது வழங்குகைக்கு இட்டுச்செல்லும் அல்லது அத்தகைய கல்லூரியின் அல்லது நிறுவனத்தின் பரீட்சையில் தேவைப்படுத்தப்பட்ட போதிய அளவிலான திறனுக்கான ஓமியோபதியிலுள்ள ஆகக்குறைந்த கல்வி நியமங்களையும் அல்லது அத்தகைய கற்கை நெறியின் நோக்கத்திற்காக அத்தகைய ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியால் அல்லது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய பணியாட்டொகுதி, கருவி, தங்குமிடம் மற்றும் வசதிகள் என்பவற்றையும் விதித்துரைத்தலும் வேண்டும்.

*ஏற்றங்கீகரிக் கப்பட்ட தகைமைகளை வைத்திருக்கும் ஆட்களின் உரிமைகளும் சிறப்புரிமை களும்.*

**28.** இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவத் தகைமை இச்சட்டத்தின் நியதிகளின்படி ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்திற்கும் மற்றும் ஓமியோபதிப் பதிவேட்டில் அத்தகைய தகைமையினை வைத்திருப்பவரின் பெயரை உட்புகுத்துவதற்கும், அதனை வைத்திருப்பவர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தகைமைகள் அளிக்கப்பட்டுள்ளார் என்பதற்கும் போதுமான எண்பிப்பாதல் வேண்டும்.

*பேரவை தகவலைக் கொடுத்து தவுவதற்குத் தேவைப்படுத் தப்படுதல்.*

**29.** ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தகைமையொன்றை அளிக்கின்ற இலங்கையிலுள்ள ஓமியோபதிசார் கல்லூரி அல்லது மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் பேரவை காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

## பாகம் VI

### ஓமியோபதிசார் தொழிலர்களின் பதிவேடு

*ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலாளர் களின் பதிவேடு.*

**30.** (1) பேரவையானது, ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களைப் பதிவு செய்கின்ற நோக்கத்திற்கென (இப்பாகத்தில் இதனகத்துப் பின்னர் "பதிவேடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

ஓமியோபதிசார் பதிவேடு ஒன்றை விதித்துரைக்கப்பட்ட முறையில் பேணி வருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ்ப் பேணிவரப்பட்ட பொது ஓமியோபதிப் பதிவேடானது இச்சட்டத்தின் கீழ் வைத்திருக்கப்பட்ட மற்றும் பேணப்பட்டதுமான ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களின் பதிவேடாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரது பெயர் அந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவரான ஒவ்வொரு ஆளும் இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) எந்த ஆளின் பெயரானது ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்களின் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் ஒருவர் -

(அ) ஓமியோபதிசார் மருத்துவராக அல்லது அரசாங்கத்தில் அல்லது உள்ளூர் அதிகாரசபையினால் பேணப்படும் ஏதேனும் நிறுவனத்தில் அதேபோன்ற வேறு ஏதேனும் பதவியினராகப் பதவி வகிப்பதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்;

(ஆ) ஓமியோபதி தொழிலைப் புரிவதற்குத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்;

(இ) ஓமியோபதி தொடர்பிலான ஏதேனும் கருமம் மீது சான்றுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் நிபுணராக ஏதேனும் சட்டமுறை விசாரணையில் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் சான்றைக் கொடுப்பதற்குத் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் -

(அ) 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் நியதிகளின்படி ஓமியோபதிப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டவரான

ஓமியோபதிசார் தொழிலர் ஒருவரின் இலங்கையில் ஓமியோபதிசார் தொழிலைப் புரிவதற்கான உரிமையைப் பாதித்தலாகாது; அத்துடன்

(ஆ) 1970 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் நியதிகளின்படி ஓமியோபதிப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டவரான ஓமியோபதிசார் தொழிலர் ஒருவருக்குக் குறித்தளிக்கப்பட்ட (ஓமியோபதிசார் தொழிலுக்கான உரிமை உள்ளடங்கலாக) சிறப்புரிமைகளைப் பாதித்தலாகாது.

(5) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னதாக 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்டவரான எவரேனும் ஆள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு ஓமியோபதிசார் தொழிலர் ஒருவராக இருப்பதாக சொல்லப்பட்ட தகைமையின் பயனைக்கொண்டு கருதப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்தப்படுகின்றது.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பேரவையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் நியதிகளின்படி ஓமியோபதிசார் பதிவேட்டைப் பேணி வைத்திருத்தலும் அப் பதிவேட்டை நாளதுவரையாக்குதலும் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதை வெளியிடுதலும் பேரவைப் பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.

(7) முப்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக ஓமியோபதிசார் பதிவேட்டில் அவரது பெயர் காணப்படுகின்றவரான எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்ட முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தமது பதிவைப் புதுப்பித்தல் வேண்டும்.

(8) ஓமியோபதிசார் பதிவேடானது சான்றுக் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பகிரங்க ஆவணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**31.** (1) ஆளெவரும், அவ்வாள் -

ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்யப் படுவதற்கான தகைமைகள்.

(அ) நற்பண்புள்ளவராகவும்;

(ஆ) இலங்கைப் பிரசை ஒருவராகவும்; அத்துடன்

(இ) ஓமியோபதிசார் மருத்துவத்திலும் அறுவை மருத்துவத்திலும் மாணிப்பட்டத்தை அல்லது திப்புளோமாவைக் கொண்டிருப்பவராகவும்,

இருந்தாலொழிய, ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) "ஓமியோபதிசார் மருத்துவத்திலும் அறுவை மருத்துவத்திலும் மாணிப்பட்டம்" என்பது, ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியால் அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்துள்ள நிறுவனமொன்றினால் வழங்கப் பட்டதும், அத்தகைய கல்லூரியின் அல்லது நிறுவனத்தின் மருத்துவக் கல்வியின் தரத்தைக் கருத்திற் கொண்டு இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், ஆறு மாதங்களுக்குக் குறையாத தொழிற்பயிற்சிக் காலப்பகுதியுட்பட நான்காண்டுக் காலத்துக்குக் குறையாத கற்கை நெறியொன்றைப் பின்பற்றிய பின்னர் பெறப்பட்டதுமான ஒரு பட்டம் என்று பொருளாகும்.

(ஆ) "திப்புளோமா" என்பது, பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு கட்டளைகற்களுட்பட ஓமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றினால் அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்துள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டதும், அத்தகைய மருத்துவக் கல்லூரியின் அல்லது நிறுவனத்தின்

மருத்துவக் கல்வியின் தரத்தைக் கருத்திற்கொண்டு இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், ஆறு மாதங்களுக்குக் குறையாத தொழிற்பயிற்சிக் காலப்பகுதியுட்பட நான்காண்டுக் காலப்பகுதிக்குக் குறையாத கற்கை நெறியொன்றைப் பின்பற்றிய பின்னர் பெறப்பட்டதுமான முழுநேர திப்புளோமாவொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் நோக்கத்துக்காகப் பேரவையானது, மருத்துவக் கல்வியின் தரத்தைத் தீர்மானிக்கையில் 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சக் கல்வி நியமங்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

எந்த விசேட சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப் படலாமோ அந்த விசேட சந்தர்ப்பங்கள்.

**32.** (1) நியமிக்கப்பட்ட திகதியில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத ஓமியோபதிசார் மருந்துகளில் அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற எவரேனும் ஆள், பதிவேட்டில் ஓமியோபதிசார் தொழிலர் ஒருவராகப் பதிவு செய்வதற்காகப் பேரவைக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(2) பேரவையானது அத்தகைய விண்ணப்பத்தினைப் பெற்ற திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் விண்ணப்பத்தில் உள்ள விபரங்களைச் சரிபார்த்தல் வேண்டுமென்பதுடன், ஓமியோபதியில் தொழிலாற்றுவதற்கு அத்தகைய ஆளின் திறமையைப் பரீட்சிப்பதற்கென எழுத்திலான பரீட்சையொன்றை நடாத்துதலும் வேண்டும்; அத்துடன் அவரது அறிவு மற்றும் அனுபவத்தில் திருப்தியடைவதன் மீது பதிவேட்டில் அத்தகைய ஆளின் பெயர் பதிவு செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நடாத்தப்படவேண்டிய பரீட்சை பற்றிய அறிவித்தலானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) பேரவையானது, (2) ஆம் உட்பிரிவின் கீழ்க் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான பரீட்சையினை நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடக் காலப்பகுதியொன்றிற்குள் மூன்று தடவைகள் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.

ஓமியோபதிபதிசார் மருந்தாளர்களின் பதிவேட்டினைப் பேணுதல்.

**33.** (1) பேரவையானது, ஓமியோபதிசார் மருந்தாளர்களின் பதிவேடு என அறியப்படவேண்டிய ஓமியோபதிசார் மருந்தாளர்கள் பதிவேடு ஒன்றை விதித்துரைக்கப்பட்ட முறையில் பேணப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடச் செய்யப்பட்ட பதிவேட்டைப் பேணி வருவதற்குப் பதிவாளர் பொறுப்பானவராதல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர் ஒருவர் ஓமியோபதிசார் மருந்தாளர்கள் பதிவுக்கென குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்யுமிடத்து, பேரவையானது அத்தகைய ஆளினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது ஓமியோபதிசார் மருந்தாளர்கள் பதிவேட்டில் அத்தகைய ஆளின் பெயரைப் பதிவுசெய்தல் வேண்டும்.

உயர்தொழில் நடத்தை நியமங்கள் மற்றும் ஒழுங்காசாரம் அத்துடன் ஒழுக்கவியற் கோவை.

**34.** பேரவையானது, ஓமியோபதித் தொழிலர்களுக்கான உயர்தொழில் நடத்தை நியமங்கள் மற்றும் ஒழுங்காசாரம் அத்துடன் ஒழுக்கவியற்கோவை என்பன தொடர்பில் விதிகளை ஆக்கலாமென்பதுடன், அத்தகைய விதிகள் உயர்தொழில் தொடர்பான ஒழுங்கற்ற பழக்கங்களையும் மற்றும் துர்நடத்தையையும் கொண்டிருக்கும் செயற்பாடுகளைக் குறித்துரைக்கவும் செய்யலாம்.

பதிவேட்டிலிருந்து ஆட்களின் பெயர்களை அகற்றுதல்.

**35.** (1) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர் ஒருவர் -

(அ) தனது ஓமியோபதிசார் தொழிலை முக்கிய தொழிலாகச் செய்யவில்லை என;

(ஆ) ஓமியோபதிசார் முறைமையைப் பின்பற்றி இருக்கவில்லையென;

(இ) அவர் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் நம்பிக்கையின்மீது மருத்துவத் தொழிலரொருவராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனும் திப்புளோமாவை, பட்டத்தை அல்லது சான்றிதழை இழப்பிக்கப்பட்டுள்ளாரென;

(ஈ) அவரை மருத்துவத் தொழிலரொருவராகத் தொழில் புரிவதற்குத் தகுதியற்றவராக்குகின்றதான தவறொன் றிற்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென; அல்லது

(உ) ஏதேனும் துர்நடத்தைக்கு அல்லது உயர் தொழிலில் ஒழுக்கமற்ற நடத்தைக்குக் குற்றவாளியாகவுள்ளா ரென,

சான்று கிடைக்கப்பெற்றதன் மேல், பேரவையானது அவ்வாறு அபிப்பிராயப்படுமிடத்து, அது உட்பிரிவு (2) ஆம், (3) ஆம் ஏற்பாடுகளுக்கு அமைவாக பதிவேட்டிலிருந்து அவரது பெயரை நீக்குதல் வேண்டும்.

(2) பேரவையானது பதிவேட்டிலிருந்து அவர்களின் பெயர்கள் நீக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய தொழிலர்களிடம் மேலே குறித்துரைக்கப்பட்ட காரணங்கள் மீது ஏன் அவர்களது பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுதலாகாது என்பதற்கு எழுத்தில் காரணங்களைத் தருமாறு தேவைப்படுத்தலாம்.

(3) பேரவையானது, பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலரினால் கொடுக்கப்பட்ட காரணங்களில் திருப்திப்படுத் தப்படாதவிடத்து, விதித்துரைக்கப்பட்ட முறையில் முறையான விசாரணையை நடாத்திய பின்னர் பதிவேட்டிலிருந்து பெயர் மற்றும் வேறு தொடர்பான எல்லா விபரங்களையும் அகற்று வதற்குக் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (5) இன் ஏற்பாடுகளுக்கமைவாக பேரவையா னது, பதிவேட்டிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்ட தொழிலர் களின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் பந்தி (இ) இல் குறித்துரைக்கப்பட்ட காரணம் தவிர்ந்த அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுக்கள் மீது ஓமியோபதிப் பதிவேட்டிலிருந்து எவரேனுமாளின் பெயர் நீக்கப்படுகின்றவிடத்தும் அத்துடன் பதிவேட்டில் தனது பெயரை மீள இடுவதற்காக சொல்லப்பட்ட

ஆளினாலான ஏதேனும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கின்ற விடத்தும், அவர் விதித்துரைக்கப்பட்ட முறையில் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(6) அத்தகைய மேன்முறையீடு தொடர்பில் அமைச்சரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "பிரதான வாழ்க்கைத் தொழில்" என்பது, ஏனைய மருத்துவ முறைமைகள் புறநீங்கலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓமியோபதிக் கோட்பாடுகளுக்கு இணங்க ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலைப் புரிதல் எனப்பொருள் படுதல் வேண்டும்.

*சில ஏற்றங்கீகரிக்கப் பட்ட மருத்துவத் தகைமைகளைக் கொண்டுள்ள எவரேனும் ஆட்களின் உரிமைகள்.*

**36.** பதிவேட்டில் எவ்வாளினுடைய பெயர் தோன்றுகின்றதோ அவ் ஒவ்வொரு ஆளும் ஓமியோபதிசார் தொழில் தொடர்பாக இச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கமைவாக, இலங்கையின் ஏதேனும் பாகத்தில் ஓமியோபதிசார் மருத்துவத்தொழில் புரிவதற்கு உரித்துடைய வராக இருத்தலும் மற்றும் அந்தச் சிகிச்சை தொடர்பில் கட்டணத்தை அறவிடுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

*"பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்" என்பதன் பொருள்.*

**37.** ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நோக்கங்களுக்காக "பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்" ஒருவர் என்னும் சொல், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவ தொழிலர் ஒருவராக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மேலதிக சிறப்புப் பட்டம், திப்புளோமா அல்லது வேறு தகைமைகளைப் பதிவுசெய்தல்.*

**38.** பதிவேட்டில் தோன்றுகின்ற பெயரையுடைய எவரேனு மாள் ஓமியோபதிசார் மருத்துவத் துறையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகைமைகளான ஏதேனும் சிறப்புப்பெயர், திப்புளோமா அல்லது வேறு தகைமைகளைப் பெற்றிருக்குமிடத்து, அவர் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட முறையில் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது முன்னதாகச் செய்யப்பட்ட ஏதேனும் பதிவுக்கு ஒன்றில் பதிலாக அல்லது மேலதிகமாக பதிவேட்டில் அவரது பெயருக்கு எதிராகச் செய்யப்பட்ட அத்தகைய வேறு சிறப்புப்பெயர், திப்புளோமா அல்லது வேறு தகைமைகளைக் குறிக்கின்ற பதிவொன்றைக் கொண்டிருப்பதற்குத் தகுதியுடைய வராதல் வேண்டும்.

**39**. பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் தனது வதிவிடத்தின் அல்லது தொழிலில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டமை பற்றி அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுள் பேரவைக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் அத்தகைய மாற்றத்தை அறிவிக்கத் தவறுகின்ற விடத்து, அவர் பேரவைக்கான உறுப்பினர்கள் தேர்தலில் பங்கு பற்றுதலுக்கான உரிமையை இழந்தவராதல் வேண்டும்.

*வதிவிடத்தின் இடமாற்றம் அறிவிக்கப் படுதல்.*

**40**. (1) ஆளொருவர் அவர் பதிவு செய்யப்பட்ட ஓமியோபதி சார் தொழிலராகவில்லாமல் இருந்து –

*பதிவு செய்யப் பட்டவோர் ஓமியோபதிசார் தொழிலராகப் பாவனை செய்தல் அல்லது பதிவு செய்யப்படா திருந்து ஓமியோபதிசார் தொழில லொருவராக ஆதாயத்திற் காகத் தொழில் புரிதல் தவறொன் றாதல்.*

(அ) சிங்களத்தில் அல்லது அதற்கிணையான வேறு ஏதேனும் மொழியில் ஒன்றில் தனியாகவோ அல்லது ஏதேனும் வேறு சொற்களுடன் அல்லது எழுத்துடன் கூட்டாகவோ "பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்" என்ற பட்டத்தைப் பயன்படுத்தினால்; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர் ஒருவர் எனத் தெரிவிக்கின்ற ஏதேனும் பெயரை, பட்டத்தை, சேர்த்தலை அல்லது விவரணத் தினைப் பயன்படுத்தினால்; அல்லது

(இ) ஆதாயத்திற்காக ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலைப் புரிந்தால்,

தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ்த் தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VII

### நிதியும் கணக்குகளும்

**41.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையின் "ஓமியோபதிசார் நிதியம்" என அழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*பேரவையின் நிதியம்.*

(2) பின்வருவன பேரவையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் அதனுடைய தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) ஓமியோபதி சார்ந்த தொழிலர்கள் மற்றும் பரீட்சை செய்பவர்களிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் கட்டணங்கள்;

(ஈ) பேரவையினால் பெறப்பட்ட ஏதேனும் கடன்கள் மற்றும் வேறு பணத்தொகைகள்; அத்துடன்

(உ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது வெளிநாடொன்றிடமிருந்து காசாகவோ அல்லது பொருளாகவோ பெறப்பட்ட ஏதேனும் மானியம், கொடை அல்லது நன்கொடை:

ஆயினும், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், பேரவையானது வெளிநாடு ஒன்றிலிருந்து அதனால் பெறப்பட்ட ஏதேனும் மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் எந்த அமைச்சருக்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள்

என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ, அந்த அமைச்சரின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக் களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் உறப்பட்ட எல்லாச் செலவினமும் நிதியத்திலிருந்து செலுத் தப்படுதல் வேண்டும்:-

**42.** (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

(2) பேரவையானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் பேரவையின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VIII

### நானாவிதமானவை

**43.** ஓமியோபதிக்கிணங்க மருத்துவத் தொழில் புரியும் ஆட்கள், மருந்து விற்பனை நிலையம் வைத்திருக்கும் மற்றும் சிகிச்சை அளிக்கும் ஆட்களுக்கு அல்லது அவர்கள் தொடர்பில் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது. *பதிவு செய்யப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்களுக்கு 105 ஆம் அத்தி யாயம் ஏற்புடைய தாகாமை.*

**44.** (1) பேரவையானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியி லும் மூன்று மாதங்களுக்குள் அத்தகைய நிதியாண்டின் போது பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய *பேரவையானது அமைச்சருக்கு அறிக்கைகள் முதலியவற்றைக் கொடுத்துதவுதல்.*

ஆண்டு அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அந்த வருடம் தொடர்பான பின்வரும் ஆவணங்கள் ஒவ்வொன்றும் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்படுவதைச் செய்தலும் வேண்டும்.

(அ) அத்தகைய அறிக்கையும், கணக்குகளும் தொடர்பான வருடத்தை உடன் அடுத்து வருகின்ற வருடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை யொன்றுடன் சேர்த்து பேரவையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்;

(ஆ) செயற்பாட்டுத் திட்டம், கூட்டுறவுத் திட்டம், செயல் நிறைவேற்ற அறிக்கை மற்றும் அமைச்சரால் தேவைப் படுத்தப்படக்கூடியவாறான வேறு தகவல்.

(2) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் கீழான ஆவணங் களின் பிரதிகளை அத்தகைய அறிக்கை கிடைத்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன் கொணருதல் வேண் டும்.

**45**. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் 2006ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய தீர்வையை, அறவீட்டை அல்லது வரி விதிப்பனவை ஆளுகின்ற அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதி களின்படி அனுமதிக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய அளவிற்கு ஏதேனும் தீர்வையின், அறவீட்டின் செலுத்துகையிலிருந்தும் மற்றும் பேரவையின் வருமானம் அல்லது இலாபங்களின் மீதான ஏதேனும் வரியிலிருந்தும் பேரவைக்கு விலக்களிக்கலாம். எவையேனும் தீர்வைகள் மற்றும் ஏதேனும் வரியிலிருந்து பேரவைக்கு விலக்களித்தல்.

**46**. (1) முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றதன் மேல் பேரவை யானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கி யொழுகவில்லையென அமைச்சர் கருதுகின்றவிடத்து, அவர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு இணங்கியொழுகா மையை அல்லது முறைப்பாட்டை ஆற்றுப்படுத்தலாமென்பது பேரவைக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறை யீடுகள்.

டன், செயலாளர் முறைப்பாடு பற்றிய விசாரணைகளை நடாத்துதல் வேண்டுமென்பதுடன், அமைச்சருக்கு அறிக்கை செய்தலும் வேண்டும். செயலாளர் அவர் தகுந்ததெனக் கருதுகின்ற வாறான விதப்புரைகளுடன் சேர்த்து அறிக்கையினைச் சமர்ப்பிக்கலாம்.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விதப்புரைகளை அங்கீகரிக்கின்றவிடத்து, செயலாளரானவர் அத்தகைய காலத்தினுள் அவ்வாறு விதப்புரை செய்யப்பட்டவற்றை நிறைவேற்றுமாறு பேரவையைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், பேரவை ஏதேனும் அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறினால் அவர் அத்தகைய விதப்புரைகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவாறான கட்டளையை ஆக்கலாம் அல்லது அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(3) பேரவையானது ஏதேனும் விதப்புரையை நிறைவேற்றுவதற்குத் தவறியிருப்பின், அமைச்சுச் செயலாளர் இச்சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குப் பேரவையைப் பணிப்பதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் களஞ்சியப் படுத்துவதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்குமான ஓமியோபதிசார் அலகுகள் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பது.

**47.** (1) வளவுகள் எவையும் விடயத்திற்கேற்ப ஓமியோபதிசார் உற்பத்தி அலகு, மருந்து விற்பனை நிலையம், களஞ்சியம் அல்லது விற்பனை நிலையம் என்பவற்றில் ஒன்றாக, அதன் பொருட்டு பணிப்பாளருக்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மீது அத்தகைய வளவுகள் பணிப்பாளரினால் அப்போதைக்குப் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் அதன் பொருட்டு நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதன் பின்னர் ஓமியோபதிசார் மருந்துகளை உற்பத்தி செய்கின்ற, களஞ்சியப்படுத்துகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதலாகாது.

(2) நியமிக்கப்பட்ட தேதியானது (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையின் வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு முற்படாததானவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றைப் புரிபவராதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஆறு மாதங்களை விஞ்சாத காலத் திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*அமைச்சரினால் பணிப்புரைகள் வழங்கப்படுதல்.*

**48.** அமைச்சரானவர், காலத்திற்குக் காலம் பேரவைக்கு அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப் பதிலும், புரிதலிலும் நிறைவேற்றுதலிலும் அத்தகைய விசேட அல்லது பொதுவான பணிப்புரைகளை எழுத்தில் வழங்கலா மென்பதுடன், அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தல் பேரவையின் கடமையாதலும் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

**49.** (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளை நிறைவேற்றுகின்ற அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக்கின்ற நோக்கத்திற்காக, விதித்துரைக்கப்படுதல் வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்கு விதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்டதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் பொதுமைக்குப் பங்கமின்றியும் குறிப்பாகவும் அமைச்சர் பின்வரும் கருமங்கள் யாவும் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்கள், மருந்தாளர் கள், மருத்துவ நிறுவனங்கள், ஓமியோபதிசார் உற்பத்திக்கூறுகள், விற்பனை நிலையங்கள் என்பவற்

றின் பதிவு எந்த முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ அந்தமுறை, விண்ணப்பத்தின் படிவம், விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள், எந்தக் காலப் பகுதிக்கு இச்சட்டத்தின் கீழ் பதிவு வலுவில் இருக்க வேண்டுமோ அந்தக் காலப்பகுதி;

(ஆ) பதிவை மறுப்பதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான அல்லது பதிவை இல்லாதொழிப்பதற்கான கட்டளைக் கற்கள் மற்றும் முறைகள்;

(இ) தலைவர், துணைத் தலைவர் மற்றும் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை;

(ஈ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் உற்பத்தி செய்யும் அலகுகள், மருந்து விற்பனை நிலையங்கள், விற்பனை நிலையங்கள் அல்லது களஞ்சியங்கள் தொடர்பில் இணங்கியொழுகப்பட வேண்டிய நியதிகளும் நிபந்தனைகளும்;

(உ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் உற்பத்தி செய்யும் அலகுகள், மருந்து விற்பனை நிலையங்கள், விற்பனை நிலையங்கள் அல்லது களஞ்சியங்கள் தொடர்பில் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் எந்த முறையில் பேணப்படுதலும் வைத்திருக்கப்படுதலும் வேண்டுமோ அந்த முறை;

(ஊ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் உற்பத்தி செய்யும் அலகு, மருந்து விற்பனை நிலையம், விற்பனை நிலையம் மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் அறிக்கைகள் காலத்திற்குக்காலம் எந்தமுறையில் கொடுத்துதவப்பட வேண்டுமோ, அந்த முறையையும் மற்றும் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்களும்;

(எ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் உற்பத்தி செய்யும் அலகு, மருந்து விற்பனை நிலையங்கள், விற்பனை

நிலையங்கள் மற்றும் களஞ்சியங்கள் என்பவற்றின் முறையான பேணுகை மற்றும் நிர்வாகம் எந்த முறையில் நிறைவேற்றப்படவேண்டுமோ அந்த முறை;

(ஏ) பேரவையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நோக்கத்திற்காக பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கை முறையும்;

(ஐ) கற்கைநெறிகளும் கற்கைக் காலமும், பொறுப்பேற்கப்பட வேண்டிய செய்முறைப் பயிற்சியும், பரீட்சைகளும் மற்றும் ஓமியோபதிசார் மருத்துவத் தகைமைகளை வழங்குவதற்காக அல்லது அளிப்பதற்காக ஏதேனும் ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரியில் நிறுவனத்தில் ஓமியோபதியில் கல்வி கற்பதற்கான பணியாட்டொகுதியின் தராதரங்கள், கருவிகள், இருப்பிடவசதி, பயிற்சி மற்றும் வேறு வசதிகள் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் அதன்கண் பெறப்பட வேண்டிய நியமங்கள் உள்ளடங்கலாக மருத்துவக்கல்விக்கான குறைந்தபட்ச நியமங்கள்;

(ஒ) மருந்தாளர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தகைமைகளும் மற்றும் கட்டளைக்கற்களும்;

(ஓ) உயர்தொழில் பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சகர்களின் தகைமைகள் மற்றும் அத்தகைய பரீட்சைகளுக்கான அனுமதி நிபந்தனைகள்.

**50.** பேரவையின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பேரவையின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

**51.** பேரவையானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள், பேரவையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

**52.** (1) 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

நீக்கமும் பேணல்களும்.

(2) மேற்சொல்லப்பட்ட சட்டமானது நீக்கப்பட்டமை எது எவ்வாறிருப்பினும்-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிதியத்தின் வரவுக்கு இருக்கின்ற எல்லாப் பணங்களும் இச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் பட்ட பேரவையின் நிதியத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் பேரவையால் அல்லது பேரவைக்கு எதிராகத் தொடரப்பட்டவையும் முடிவுறாதிருப்பவையுமான எல்லாத் துடர்ச்சிகளும் வழக்குகளும் பேரவையால் அல்லது பேரவைக்கு எதிராகத் தொடரப்பட்ட துடர்ச்சிகளாகவும் வழக்குகளாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்;

(இ) ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் பேரவைக்கு சாதகமாக அல்லது அதற்கு எதிராகப் பதியப்பட்டு அல்லது ஆக்கப்பட்டு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று திருப்திப்படுத்தப்படாது எஞ்சியிருக்கும் எல்லாத் தீர்வைகளும் கட்டளைகளும், பேரவைக்குச்

சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்டு அல்லது ஆக்கப்பட்டு இருந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுக்கிடவும் படலாம்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப் பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவில் இருக்கின்றவையும் அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்ற வையுமான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் நியதிகளின் படி ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுகின்றவரை இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் நிருவகிக் கப்பட்டதும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன வுமான ஓமியோபதிசார் வைத்தியசாலைகள் இச்சட்டத் தின் கீழ்த் தாபிக்கப்பட்ட வைத்தியசாலைகள் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்.

*இடைக்கால ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை.*

**53.** (1) பிரிவு 2 இன் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் அமைச்சரானவர் இடைக்கால ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை ஒன்றை நியமித்தல் வேண்டுமென்பதுடன் (இது இதனகத்துப்பின்னர் “இடைக்காலப் பேரவை” என்று குறிப்பீடு செய்யப்படும்), அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) பிரிவு 2 (3) (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதவி வழி உறுப்பினர்கள்;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்கள் நான்கு பேர்; அத்துடன்

(இ) சட்டம், மருத்துவம் மற்றும் அறிவியல் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அறிவு, அனுபவத்தை வெளிக்காட்டியுள்ளவர்களும் மற்றும் பிரசித்தி பெற்றவர்களாயிருக்கின்றவர்களான மூன்று ஆட்கள்.

(2) இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் பேரவையானது அமைக்கப்படும் வரை இடைக்காலப் பேரவையானது பேரவையின் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று மாத காலப்பகுதியொன்றிற்குள் இடைக்காலப் பேரவையை நியமித்தல் வேண்டும்.

(4) இடைக்காலப் பேரவையின் தலைவரையும் மற்றும் துணைத் தலைவரையும் அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து நியமித்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (2) இன் ஏற்பாடுகளுக்கமைவாக, இடைக்காலப் பேரவையின் உறுப்பினர்கள், பேரவையானது அமைச்சரினால் நியமிக்கப்படும் வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

(6) இடைக்காலப் பேரவையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் ஐந்து ஆதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**54**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி,-

"ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்;

"பேரவை" என்பது, இரண்டாம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவப் பேரவை என்று பொருள்படும்;

"பட்டம் வழங்கும் நிறுவகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"மருந்தகம்" என்பது, (விபரிக்கப்பட்டது எப்படியிருந்த போதிலும்) நோயினால் வருந்துகின்ற ஆட்களின் வெளிவாரியான சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் வளவுகள் என்று பொருள்படும்;

"ஓமியோபதி" என்பது, வைத்தியக் கலாநிதி ஹனிமானினால் தாபிக்கப்பட்ட மருத்துவமுறைமைக்கிணங்கத் தயாரிக்கப்படும் மருந்தைப் பயன்படுத்துகின்ற அம் மருத்துவ முறைமை என்று பொருள்படும் என்பதுடன், நோய்களின் சிகிச்சை முகாமை, நோய்த்தடுப்பு மற்றும் ஆரோக்கிய மேம்படுத்தலுக்கு அவசியமாக உள்ளவாறான, அறிவியலில் மற்றும் தொழில்நுட்பத்தில் எல்லா அத்தகைய நவீன உயர்தர முறைமைகளைப் பயன்படுத்துகின்றதுமான மருத்துவமுறைமை என்று பொருள்படும். அத்துடன் அது உயிரியல் இரசாயன பரிகாரங்களின் பயன்பாடு, இயற்கைச் சிகிச்சைகள், பச்பிளவர் பரிகாரங்கள், அந்திரோபோமோபிக் ரீதியான மருந்துகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

"ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி" என்பது, ஏதேனும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறி அல்லது பயிற்சி அத்துடன் ஓமியோபதியில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்றைப் பெறுவதற்கு அவர்களைத் தகைமையுடையவர்களாக்கும் ஓமியோபதியின் அபிவிருத்தி தொடர்புபட்ட அத்தகைய வேறு எல்லாக் கற்கைநெறிகளும் உட்பட ஓமியோபதிக் கல்லூரி என்ற பெயர்கொண்டு அறியப்படினுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் பெயர்கொண்டு அறியப்படினுஞ்சரி ஆளொருவர் எந்த ஓமியோபதிக் கல்லூரியில் கற்கைநெறியொன்றை அல்லது பயிற்சியை மேற்கொள்ளலாமோ அந்த ஓமியோபதிக் கல்லூரி என்று பொருள்படும்;

"ஓமியோபதிசார் நிறுவனம்" என்பது, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லாத, ஓமியோபதியில்

அல்லது அது தொடர்புபட்ட கற்கைநெறிகளில் பட்டங்கள், டிப்ளோமாக்கள் அல்லது உரிமங்களை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனம் என்று பொருள் படும் என்பதுடன், பல்கலைக்கழகமொன்றையும், பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றையும் மற்றும் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் குறிப்பீடுசெய்யப்பட்ட நிறுவகமொன்றையும் உள்ளடக்கும்;

“ஓமியோபதிசார் மருத்துவத் தகைமை” என்பது, இச் சட்டத்தின்கீழ் அதனை வைத்திருப்பவர் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவாகவுள்ள ஏதேனும் தகைமை என்று பொருள்படும்;

“அமைச்சர்” என்பது, ஓமியோபதிசார் மருத்துவமுறைமை என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக் கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருள் படும் என்பதுடன், “அமைச்சு” என்பது அதற்கிணங் கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

“மருந்து விற்பனை நிலையம்” என்பது, உற்பத்தி செய்யப்பட்ட, தயாரிப்பட்ட அல்லது கூட்டுச்சேர்க்கப்பட்ட ஓமியோ பதிசார் மருந்துகளை உற்பத்தி செய்கின்ற அலகு என்பதை உள்ளடக்குகின்றது;

“விதித்துரைக்கப்பட்டது” என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

“அங்கீகரிக்கப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனம்” என்பது, மருத்துவத் தகைமை யொன்றை வழங்குகின்ற அல்லது அளிக்கின்ற பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓமியோ பதிசார் மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனம் என்று பொருள்படும்;

"பதிவேடு" என்பது, இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் பேரவையினால் பேணப்பட்ட ஓமியோபதிசார் தொழிலர்களின் பதிவேடு எனப் பொருள்படும்;

"பதிவுசெய்யப்பட்ட ஓமியோபதிசார் மருத்துவத் தொழிலர்" என்பது, இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவராக உள்ள ஆட்களும் மற்றும் 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ்ப் பேணப்பட்ட பொதுப் பதிவேட்டில் அப்போதைக்குப் பதிவு செய்யப்பட்டவராகவுமிருக்கின்றவருமான ஓர் ஆள் என்று பொருளாகும்;

"விதிகள்" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி என்று பொருள்படும்;

"பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் எனப்பொருள்படும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**55.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*